# புதுச்சேரியின் உணவுப் பழக்கம்

பிரென்ஞ்ச் இண்ஸ்ட்யூட் புதுச்சேரி, புதுவை வேளாண்துறை மற்றும் உள்ளூர் நிறுவனங்களுடன் சேர்ந்து வரும் ஜனவரி 4,5, மற்றும் 6, 2019 அன்று புதுச்சேரியின் உணவுப் பழக்கம் மற்றும் உணவுச் சார்ந்த வேளாண்மை பற்றி மூன்று நாள் கருத்தாய்வு பிரென்ஞ்ச் இண்ஸ்ட்யூட் நிறுவனம், 11, செயிண்ட் லூயிஸ் தெரு, புதுச்சேரியில் நடைபெறுகிறது.

இந்த கருத்தாய்வில் "உள்ளூர் உணவுப் பழக்கம்" மற்றும் இந்த உணவை விளைவித்து, பதப்படுத்தி பயனாளிக்கும் தருவிக்கும் நபர்களுடன் விவாதம் நடத்தப்படுகிறது. இந்த உள்ளூர் உணவுப் பழக்கம் இங்கு விளையும் பொருட்கள், பதப்படுத்துதல் மற்றும் உட்கொள்ளுதல் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது. இதன் மூலம் இப்பகுதியில் வாழும் மக்களுக்கு தேவையான உணவை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு கிடைக்கிறது.

நிகழ்ச்சிகள் : 4 ஜனவரி 2019 : உள்ளூர் உணவுப் பழக்கம் பற்றிய கலந்தாய்வு.

5 ஜனவரி 2019 : இயற்கை விவசாயம் நடைபெறும் பூத்துறை கிராமத்தை பார்த்தல் மற்றும் தற்கால உணவு பழக்கத்தைப் பற்றி உள்ளூர் மக்களிடம் விவாதித்தல்.

6 ஜனவரி 2019 : பிரெஞ்ச் இன்ஸ்ட்யூட் அருகே உள்ள தெருவில் இயற்கை விவசாயம் மற்றும் பராம்பரிய விதைகள் பாதுகாப்போர் தங்களுடைய பொருட்களை பொதுமக்களுக்கு விளக்குவார்கள். உணவு தயாரிக்கும் முறையையும் விளக்குவார்கள்.

இந்த நிகழ்ச்சியில் புதுவை வேளாண்துறை, கே.வி.கே. ஜிப்மர் மருத்துவமனை உணவு பழக்க வல்லுநர், தானம் அறக்கட்டளை, திம்பக்து நிறுவனம், மகம், கீஸ்டோன், இன்சீஸன் பிஷ் நிறுவனங்கள், சிறுதானிய கூட்டமைப்பு, பாண்டிகேன், இயற்கை விவசாயம் செய்பவர்கள், மற்றும் ஜவ்வாது மலை விவசாயிகள் கலந்து கொள்வார்கள்.

தொடர்புக்கு : ஹெலன் கெதத் பெர்னார்ட், வெங்கடசுப்பரமணியன், பிரென்ஞ்ச் இண்ஸ்ட்யூட் புதுச்சேரி.